20.02.2025

O.S.No.178/2016

வா.சா.1.திரு.மந்தகாளை த.பெ.அழகப்பகோனார்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1 ம் பிரதிவாதி தரப்பு** குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட அசல் வழக்கு எண்.447/2013 வழக்கில் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு A.S.No.158/2019 தாக்கல் செய்யப்பட்டு அதில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பும், தீர்ப்பாணையும் தான் இந்த வழக்கில் வா.சா.ஆ 20 மற்றும் வா.சா.ஆ 21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மேல் முறையீட்டு தீர்ப்புக்கு எதிராக 2 ம் மேல்முறையீடு செய்யும் விதமாக அந்த மேல்முறையீட்டு தீர்ப்பின் நகலை கோரி மனு தாக்கல் செய்து 1 ம் பிரதிவாதிக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. மேற்படி தீர்ப்பில் கட்டுப்பட்டுள்ள சாரம்சங்களும் இந்த வழக்கின் சங்கதிகளும் வெவ்வேறானவை என்றால் சரிதான். A.S.No.158/2019 தீர்ப்பு இன்னும் முழுமை பெறாமல் இருப்பதால் அதை அனுகூலமாக இந்த வழக்கில் நான் பயன்படுத்த முடியாது என்றால் சரியல்ல.